## 6th Social Science Lesson 1 Questions in Tamil - வரலாறு

### 1. வரலாறு என்றால் என்ன?

1. வரலாறு என்ற சொல் ____________மொழிச் சொல்லான 'இஸ்டோரியா' என்பதிலிருந்து பெறப்பட்டது.
A) இலத்தீன்
B) பிரெஞ்சு
C) சீன மொழி
D) கிரேக்கம்

2. கூற்று 1: வரலாறு என்பது கடந்தகால நிகழ்வுகளின் காலவரிசைப் பதிவு.
கூற்று 2: வரலாற்றின் காலம் ஆண்டுகளில் கணக்கிடப்படுகிறது.
A) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி
B) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு
C) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி
D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

3. கீழ்க்கண்டவற்றுள் புதிய கற்கால கற்கருவிகள் கண்டுபிடிக்கப்பட்ட இடங்கள் எவை?
1. மெஹர்கர் 2. மாகரா 3. அத்திரம்பாக்கம்
4. அதிச்சநல்லூர் 5. டவோஜலி ஹேடிங்
A) 1, 2, 3
B) 2, 3, 4
C) 1, 2, 5
D) 2, 3, 5

4. இரும்புக் கால கற்கருவிகள் கண்டுபிடிக்கப்பட்ட இடம் _______
A) லோத்தல்
B) கோல்டிவா
C) ஹல்லூர்
D) மெஹர்கர்

5. கீழ்க்கண்டவற்றுள் வெண்கலக் கால கற்கருவிகள் கண்டுபிடிக்கப்பட்ட இடங்கள் எவை?
1. லோத்தல் 2. பிம்பேட்கா
3. பையம்பள்ளி 4. ஆதிச்சநல்லூர்
A) 1, 4
B) 1, 2, 3
C) 3, 4
D) 1, 3, 4

6. கீழ்க்கண்டவற்றுள் பழைய கற்கால கற்கருவிகள் கண்டுபிடிக்கப்பட்ட இடங்கள் எவை?
1. கோல்டிவா 2. பிம்பேட்கா 3. அத்திரம்பாக்கம்
4. ஆதிச்சநல்லூர் 5. ஹன்சாகி பள்ளத்தாக்கு
A) 1, 2, 3
B) 2, 3, 4
C) 1, 3, 5
D) 2, 3, 5

7. கற்கருவிகளை பயன்படுத்தியதற்கும் எழுதும் முறைகளை கண்டுபிடித்ததற்கும் இடைப்பட்ட காலம்
A) வரலாற்றுத் தொடக்க காலம்
B) வரலாற்றுக்கு முந்தைய காலம்
C) இருண்டகாலம்
D) கற்காலம்

8. கூற்று 1: வரலாற்றுக்கும், வரலாற்றுக்கு முந்திய காலத்திற்கும் இடைப்பட்ட காலம் வரலாற்றுத் தொடக்க காலம் ஆகும்.
கூற்று 2: வரலாற்றுத் தொடக்க காலத்தில் எழுதப்பட்ட பதிவுகள் உள்ளன. தற்போது அவற்றின் பொருளை நாம் புரிந்து கொண்டுள்ளோம்.
A) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி
B) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு
C) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி
D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

9. கூற்று 1: நாணயம், அதன் வரலாறு தொடர்பான அறிவியல் சார்ந்த துறை நாணவியல் ஆகும்.
கூற்று 2: கல்வெட்டுகளில் பதிவு செய்யப்பட்ட செய்திகளை ஆராய்வதற்கான துறை கல்வெட்டியல் ஆகும்.
A) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி
B) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு
C) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி
D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

winmeen.com

10. கூற்று 1: தம்மா என்பது சமஸ்கிருத மொழிச் சொல்.
கூற்று 2: இது பிராகிருதத்தில் தர்மா எனப்படுகிறது.
A) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி
B) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு
C) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி
D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

11. யாருடைய ஆட்சியில் புத்த மதம் ஆசியாவின் பல்வேறு பகுதிகளுக்கு பரவியது?
A) அக்பர்
B) கனிஷ்கர்
C) அசோகர்
D) பாபர்

12. ___________ போருக்கு பின் அசோகர் புத்த சமயத்தைத் தழுவி, அமைதியையும் அறத்தையும் பரப்புவதற்காகத் தன் வாழ்வையே அர்ப்பணித்தார்.
A) இரண்டாம் பானிபட் போர்
B) இலங்கை போர்
C) சௌசா போர்
D) கலிங்கப் போர்

13. தேசியக் கொடியில் இடம்பெற்றுள்ள 24 ஆரக்கால் சக்கரம் அசோகர் நிறுவிய ___________ தூணில் உள்ள முத்திரையிலிருந்து பெறப்பட்டது.
A) அமர்நாத்
B) சாரநாத்
C) கேதார்நாத்
D) பத்ரிநாத்

14. கீழ்க்கண்டவற்றுள் யாருடைய வரலாற்று ஆய்வுகள் மூலம் அசோகரின் சிறப்புகள் வெளி உலகுக்கு தெரிய வந்தன?
1. வில்லியம் ஜோன்ஸ் 2. ஜேம்ஸ் பிரின்செப்
3. அலெக்சாண்டர் கன்னிங்காம் 4. சார்லஸ் ஆலன்
A) 1, 2, 3
B) 2, 3
C) 1, 2, 4
D) 1, 3, 4

15. "The Search for the India's Lost Emperor" என்ற நூலை வெளியிட்டவர்?
A) ஜேம்ஸ் பிரின்செப்
B) அலெக்சாண்டர் கன்னிங்காம்
C) சார்லஸ் ஆலன்
D) வில்லியம் ஜோன்ஸ்

16. அசோகரின் பெருமையை எடுத்துச் சொல்லும் சான்றுகள் எவை?
1. சாரநாத் தூண் 2. அமர்நாத் குகை
3. டெல்லி செங்கோட்டை 4. சாஞ்சி ஸ்தூபி
A) 1, 2
B) 2, 3
C) 1, 4
D) 2, 4

17. பழங்கால மனிதன் தனது உணவை சேகரிக்க மேற்கொண்ட நடவடிக்கை
A) வணிகம்
B) வேட்டையாடுதல்
C) ஓவியம் வரைதல்
D) விலங்குகளை வளர்த்தல்

18. கூற்று: பழைய கற்கால மனிதர்கள் வேட்டையாடச் செல்லும் போது நாய்களை உடன் அழைத்துச் சென்றனர்.
காரணம்: குகைகளில் பழைய கற்கால மனிதன் தங்கியிருந்தபோது, விலங்குகள் வருவதை நாய்கள் தமது மோப்ப சக்தியினால் அறிந்து அவனுக்கு உணர்த்தின.
A) கூற்று சரி, காரணம் தவறு
B) கூற்று சரி, கூற்றுக்கான காரணமும் சரி
C) கூற்று தவறு, காரணம் சரி
D) கூற்று தவறு, காரணமும் தவறு

19. பழைய கற்கால மனிதன் பெரும்பாலும் வாழ்ந்த இடங்கள் ___________.
A) ஆற்றங்கரை
B) குகை
C) மரங்கள்
D) படகு

20. பண்டைய காலத்தில் வாழ்ந்த மனிதர்கள் பயன்படுத்திய பொருட்கள் அகழாய்வுகள் மூலமாக தோண்டியெடுக்கப்பட்டுள்ளன. அப்பொருட்கள் அக்கால மக்களின் வாழ்க்கை முறை பற்றி அறிந்து கொள்ளப் பாதுகாக்கப் படுகின்றன. இக்கூற்றுடன் தொடர்புடையது எது?

winmeen.com

A) அருங்காட்சியகங்கள்

B) புதைபொருள் படிமங்கள்

C) கற்கருவிகள்

D) எலும்புகள்

21. தவறான இணையைக் கண்டுபிடி

A) பழைய கற்காலம் – கற்கருவிகள்

B) பாறை ஓவியங்கள் – குகைச் சுவர்கள்

C) செப்புத் தகடுகள் – ஒரு வரலாற்று ஆதாரம்

D) பூனைகள் – முதலில் பழக்கப்படுத்தப்பட்ட விலங்கு

22. தவறான கூற்றைத் தேர்ந்தெடு.

A) பாறைகள் மற்றும் குகைகளில் ஓவியங்கள் வரையப்பட்டிருந்தன.

B) வேட்டையாடுதலை குறிப்பதாக ஓவியங்கள் இருந்தன.

C) பழங்கால மனிதன் தனது குடும்ப உறுப்பினர்களுக்கு வேட்டையாடுதலை எடுத்துரைப்பதற்காக வரைந்திருக்கலாம்.

D) பல வண்ணங்களில் ஓவியங்கள் வரையப்பட்டிருந்தன.

23. பொருத்துக.

1. பாறை ஓவியங்கள் – i) செப்புத் தகடுகள்

2. எழுதப்பட்ட பதிவுகள் – ii) மிகவும் புகழ்பெற்ற அரசர்

3. அசோகர் – iii) தேவாரம்

4. மத சார்புள்ள இலக்கியம் – iv) வாழ்க்கை முறையைப் புரிந்துகொள்வதற்கு உதவுகிறது.

A) ii i iii iv

B) iii i ii iv

C) iv i ii iii

D) ii i iii iv

24. கூற்று 1: பழைய கற்காலத்தைச் சேர்ந்த கற்கருவிகள் சென்னைக்கு அருகில் உள்ள அத்திரம்பாக்கத்தில் கிடைத்துள்ளன.

கூற்று 2: பழங்கால மனிதர்கள் பயன்படுத்திய பொருட்கள் தொல்லியல் துறையினரால் அருங்காட்சியகத்தில் பாதுகாக்கப்படுகின்றன.

A) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி

B) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

C) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

25. _______ என்பவர் பதிவு செய்திருக்காவிட்டால், அசோகரின் வரலாறு மறைக்கப்பட்ட வரலாறாக இருந்திருக்கும்.

A) ஜேம்ஸ் பிரின்செப்

B) அலெக்சாண்டர் கன்னிங்காம்

C) சார்லஸ் ஆலன்

D) வில்லியம் ஜோன்ஸ்

26. தவறான இணையைத் தேர்ந்தெடு.

A) கோட்டை – வேலூர்

B) கோயில்கள் – தஞ்சாவூர்

C) ஸ்தூபி – சாஞ்சி

D) மடங்கள் – திருமலை நாயக்கர் மஹால்

winmeen.com